# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 89/2017 | வா.சா. | : 3 |
| பெயர் | : மாயக்கண்ணன் | த/பெ. | : அழகன் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : விளாம்பட்டி |
| தேதி | : 17.11.2023 | வயது | : 45/2023 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 12.24 P.M. – 12.38 P.M.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

2) இவ்வழக்கில் சாட்சியமளிக்க எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. இவ்வழக்கில் சாட்சியமளிக்க என்னை ராமலிங்கம் என்பவர் அழைத்து வந்தார் என்றால் ஆமாம். சாத்தாம்பாடி கிராமத்தில் புல எண். 109/3ல் என் தாயார் நாச்சம்மாளுக்கு நிலம் இருப்பதாக சா.சா.ஆ-3 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் நாச்சம்மாளின் மகன் என்பதை காட்ட வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சா.சா.ஆ.3 ஆவணத்திலுள்ள நிலத்தை நாச்சம்மாள் அனுபவத்தி வந்தார் என்பதை காட்ட வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) மேற்படி ஆவணத்திலுள்ள நிலத்தை தற்போது நான் அனுபவித்து வருகிறேன் என்று காண்பிக்க பட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இன்னும் எங்கள் பெயருக்கு பட்டா மாற்றப்படவில்லை. சா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள நான்குமாலில் மாயம்மாள் புஞ்சை என்று காட்டப்படவில்லை என்றால் சரி. நாங்கள் அனைவரும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் தான். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் என் பங்காளி முறை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) மாயம்மாள் வழக்குச் சொத்தில் வீடுகட்டி அனுபவம் செய்து வருகிறார் என்பதை காட்டக்கூடிய ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் ஆவணங்கள் யார் பெயரிலுள்ளது என்று தெரியாது, ஆனால் அவர் தான் சுமார் 40 வருடங்களாக அனுபவித்து வருகிறார். ராமலிங்கம் என் உறவினரா என்றால் ஆமாம், பங்காளியாவார். ராமலிங்கம் எனது பங்காளி என்பதால் ஆவணங்கள் எதையும் பார்க்காமல் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் பெயரில் சாத்தாம்பாடி கிராமத்தில் சொத்து உள்ளது என்பதை காண்பிக்க நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் பெயரில் நிலம் இல்லை, பூர்வீக சொத்து தான் உள்ளது.

5) எங்கள் பூர்வீக சொத்தின் புல எண் என்ன என்றால் 108/8A ஆகும். அது என் அப்பச்சி பெருமான் பெயரிலுள்ளது. பூர்வீக சொத்திற்கான பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் ஆவணம் எதுவுமில்லாமல் சாத்தாம்பாடியில் எனக்கு சொத்து இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் இல்லாமல் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 17.11.2023. கையெழுத்து செய்துள்ளார்.

V UDAYA SURIYA
Digitally signed by V UDAYA SURIYA
Date: 2023.11.17 22:22:50 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.